**செய்தி வெளியீடு எண்: 949** **நாள்:11.12.2020**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 10.12.2020 அன்று தலைமைச் செயலகத்தில், கலை பண்பாட்டுத் துறையின் சார்பில், சென்னை, ராஜா அண்ணாமலைபுரத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி வளாகத்தில், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழகத்திற்கு 14 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். மேலும், சென்னை, மயிலாப்பூர் லஸ் அவென்யூவில் அமைந்துள்ள தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றத்திற்கு 2 கோடியே 41 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழகத்தில் குரலிசை, வீணை, வயலின், பரதநாட்டியம், நாதஸ்வரம் மற்றும் மிருதங்கம் ஆகிய பாடப்பிரிவுகளில் முதுகலை பட்டப்படிப்புடன், வார இறுதி நாட்களில் முதுகவின் கலையில் ஓவியம் மற்றும் காட்சிவழி தொடர்பு ஆகிய பாடப் பிரிவுகளில் இளநிலை, முதுநிலை மற்றும் ஆராய்ச்சி பட்டப்படிப்புகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. இப்பல்கலைக்கழகம், தற்போது தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி வளாகத்தில் போதுமான இடவசதி இல்லாமல், திறந்தவெளி கலையரங்கின் மேல்தளத்தின் கீழ் இணைந்தவாறு இயங்கி வருகிறது. எனவே, இப்பல்கலைக்கழகத்திற்கு அனைத்து வசதிகளுடன் கூடிய உட்கட்டமைப்பு வசதிகள் மிகவும் அவசியம் என்பதை கருத்திற் கொண்டு புதிய கட்டடம் கட்டும் வகையில், தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி வளாகத்தில், 4,125 சதுர மீட்டர் கட்டட பரப்பளவில், தரைத்தளம் மற்றும் நான்கு தளங்களுடன் 14 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய கட்டடத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

கலை பண்பாட்டுத்துறையின் கீழ், சென்னை, மயிலாப்பூர் லஸ் அவென்யூவில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றத்தில், ஐந்து வயது முதல் பதினாறு வயதுக்கு உட்பட்ட பள்ளி மாணாக்கர்களுக்கு குரலிசை, பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம் போன்ற கலைப்பயிற்சிகள் கற்பிக்கப்பட்டு வருகிறது. இம்மன்றக் கட்டடம் பழுதடைந்த நிலையில் உள்ளதால், அக்கட்டடத்தை இடித்து விட்டு, அவ்விடத்தில் சுமார் 628 சதுர மீட்டர் கட்டடப் பரப்பளவில், தரை மற்றும் முதல் தளத்துடன், 2 கோடியே 41 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய கட்டடத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் திருமதி வ. கலையரசி, இ.ஆ.ப., தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழக துணை வேந்தர் திருமதி பிரமீளா குருமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**